[20th September 1961

Joint Civil Services Council.

* 1651 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. P. SARATHI) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ஊழியர்களின் குறைபாடுகளைக் களைய "Joint Civil Service Council" அமைக்கப்பட்டு எவ்வளவு காலம் ஆகின்றது ?

(இ) எந்தெந்த இலாக்காகளுக்காக அமைக்கப்பட்டுள்ளது ?

(உ) இது வரையில் எத்தனை கூட்டங்கள் நடைபெற்றுள்ளன ?

(எ) இந்தக் கவுன்சில் இது வரையில் சாதித்த சாதனைகள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM :

(அ) இக்குழு அமைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகின்றன.

(இ) இம்மத்தியக் குழு, எல்லா இலாக்காகளையும் தழுவும்.

(உ) ஒன்பது கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

(எ) அன்றாட அலுவல்களில் ஊழியர்களுக்கு உள்ள குறைகளையும் கஷ்டங்களையும் இக்குழு ஆராய்ந்து அவற்றைப் போக்கச் சிபார்சுகள் செய்கிறது. இச்சிபாரிசுகளை அரசாங்கம் விரைவில் பரிசீலனை செய்து, உத்தரவுகள் வெளியிடுகின்றது.

Madurai Collectorate.

* 1652 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லாக் கலெக்டர் ஆபீசை மெடிகல் காலேஜுடன் சேர்க்க உத்தேசமுண்டா ?

(இ) கலெக்டர் ஆபீஸ் மதுரை ஜில்லா போர்ட் ஆபீசில் வைக்கப் படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU (*a*) No Sir.

(*b*) Does not arise.

Provident Fund—Misappropriation of

* 1653 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (On behalf of SRI S. M. ANNAMALAI) : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-ம் ஆண்டு மார்ச் 13-ம் தேதியில் நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 793-க்கு அளித்த பதிலையொட்டி போலீஸ் துப்பறிவது (Investigation) எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The matter is still under investigation by the Police.

General Elections 1962.

* 1654 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have made any proposals to the Election Commission regarding the programme for holding the General Elections during 1962 in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) No concrete proposals have been made to the Election Commission regarding the actual programme for holding the General Elections in this State. The Election Commission has, however, been informed that, as far as Madras State is concerned, the first week of March 1962 is the most convenient and suitable period for holding the General Elections and that failing the first week, the second week of March

1962 is preferred. I may add that I am sure the hon. Members would have noticed that February 22 to 28 have been fixed as the dates for holding the General Elections.

Dredger "Tuticorin"

* 1655 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— 9 00 a,m.

(அ) தூத்துக்குடித் துறைமுகச் சபையிடம் உள்ள **"Tuticorin"** என்னும் தூர்வாரிக் கப்பல் 1959-ல் பாம்பன் வாய்க்காலை ஆழப்படுத்திக் கொண்டிருக்கையிலும் 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் தேதி "மல்லன் தீவு" என்பதற்கு அருகில் சேற்றினம் கொட்டுவதற்காகச் செல்கையிலும் சேதமடைந்ததா ?

(இ) அதை மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்தாருக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது ?

(உ) அது சம்பந்தமாக விசாரணை ஏதேனும் நடத்தப்பட்டதா ? அப்படியானால், அதன் மூலம் கண்டறியப்பட்ட உண்மைகள் யாவை ?

(எ) அதற்குப் பொறுப்பானவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir. But the second accident took place on 12th May 1960 and not on 12th June 1960.

(*b*) The cost of repairs due to the first accident on 21st March 1959 was Rs. 4,420. This amount has been recovered from the Insurers. The cost of repairs due to the second incident is Rs. 29,760.

(*c*) & (*d*) Yes, Sir. In regard to the first accident it was held that it was an accident of the sea and that nobody could be held responsible. As regards the second accident after conducting an enquiry the Mate of the Dredger was censured as he was held responsible for the accident due to carelessness and neglect of duty.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்த விபத்து எற்பட்ட சந்தர்ப்பம் என்ன ? இதனால் எவ்வளவு சேதங்கள் ஏற்பட்டன ? இதை விசாரித்த அதிகாரி யார் ?

THE HON. SRI P. KAKKAN : பாம்பன் கால்வாயில் போக்குவரத்து இருந்த இடத்தில் 12 அடி ஆழம் இருந்தது. அதன் பின்னால் மணல்கரை சானல் இருக்கிறது. இது ஆழமாக இருந்திருக்க வேண்டும். அதில் மணல் மேடாக இருந்ததினால் இந்தக் கப்பல் போகும் போது சகதியில் மோதி இந்த சேதம் ஏற்பட்டது. அதோடு திரும்பும் போதும் ஓர் இடத்தில் மோதியது, அதன் காரணமாகவும் சேதம் ஏற்பட்டது. இதற்காக 29 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்பட்டது. இதை மத்திய சர்க்கார் விசாரித்து, போர்ட் ஆபீஸர் மூலமாக வார்னிங் கொடுத்தார்கள்.

Panchayat (Tambaram)

* 1656 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to upgrade Tambaram Panchayat into a municipality?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Yes, Sir.

SRI A. A. RASHEED : May I know when the municipality will be formed and also is it a fact that this panchayat conforms to all the requirements of a municipality?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : It is only after considering whether its population and income are enough for the purpose of forming a municipality, the Tambaram Panchayat has